# ஊடக அறிக்கை

2019 டிசெம்பர் 31ம் திகதி, சீனாவின் Hubei மாகாணத்தில் வூஹான் நகரத்தில் முன்னர் அறிந்திராத ஒரு வகை வைரசினால் நியூமோனியா தாக்கத்திற்கு பலர் ஆளாகியிருப்பதாக சீன சுகாதார அதிகாரிகளினால் உலக சுகாதார நிறுவனத்திற்கு உசார்படுத்தப்பட்டுள்ளது. ஒரு வாரத்தின் பின்னர் அதாவது 2020 ஜனவரி 7ம் திகதி, அந்நோய்க்கான காரணம் கொரோனா வைரஸ் என்று உறுதிப்படுத்தப்பட்டதுடன், அது “2019-nCoV” (novel coronavirus) எனவும் பெயரிடப்பட்டது. கொரோனா வைரஸானது மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் இடையில் கடத்தப்படுகின்ற பெரியதொரு வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்ததாகும். அவை சாதாரணமான தடிமனிலிருந்து Middle East Respiratory Syndrome (MERS-CoV) மற்றும் Severe Acute Respiratory Syndrome (SARS) போன்ற பாரதூரமான கடுமையான நோய்களை உண்டாக்கக்கூடியனவாகும்.

2019-nCoV இனால் பாதிக்கப்பட்ட அதிகமான நோயாளர்கள் Hubei மாகாணத்திலும், சீனாவின் ஏனைய மாகாணங்களிலும் நகரங்களிலும், மற்றும் பல நாடுகளிலும் அடையாளம் காணப்பட்டனர். 2020 ஜனவரி 24ம் திகதி வரை உலக சுகாதார நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்ட 846 உறுதிப்படுத்தப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளர்களில், 830 பேர் சீனாவைச் சேர்ந்தவர்கள். ஐந்து பேர் தாய்ப்பே, மாக்கோ மற்றும் ஹொங்கொங்கைச் சேர்ந்தவர்களாகும். வேறு நாடுகளைச் சேர்ந்த ஏனைய 11 பேரில், 10 பேர் வூஹான் நகருக்கு பயணம் செய்திருந்தவர்களாகும். 4 பேர் தாய்லாந்தைச் சேர்ந்தவர்கள் எனவும், தலா 2 பேர் கொரிய குடியரசு மற்றும் வியட்நாமைச் சேர்ந்தவர்கள் எனவும், யப்பான், சிங்கப்பூர் மற்றும் அமெரிக்காவிலிருந்து ஒவ்வொருவர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 25 மரணங்கள் சம்பவித்துள்ளதாகவும், அவை அனைத்தும் சீனாவைச் சேர்ந்தவர்கள் எனவும் அறிவிக்கப்படுகிறது.

2019-nCoV ஆனது ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு கடத்தப்பட முடியும். சீனாவை விட வேறு நாடுகளிலும் பரவுவதாக சொல்லப்படுவது போன்று இலங்கையிலும் பரவக்கூடிய வாய்ப்பிருப்பதனால், நாட்டினுள் அவ்வாறான பரவலைத் தடுப்பதற்கான அத்தனை பொது சுகாதார நடவடிக்கைளையும் முன்னெடுப்பது அத்தியாவசியமாகும்.

குடிவரவு நுழைவாயில்களில் ஏற்கெனவே அவசியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

- நாட்டுக்குள் வருகை தருகின்ற பயணிகள் யாருக்காவது குறித்த நோய்க்கான அறிகுறிகள் (காய்ச்சல், இருமல், தடிமன், சுவாசிப்பதில் சிரமம்) காணப்படுமிடத்து, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் சுகாதார பிரிவுக்கு அறிக்கையிடுமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது.
- குறித்த சுகாதார பிரிவு 24 மணிநேரமும் இயங்குகிறது.
- பயணிகளுக்கு காய்ச்சல் இருப்பதனைக் கண்டறிய வெப்ப ஸ்க்கேனர்கள் விமான நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளன.
- சுவாச நோய்க்கான அறிகுறிகள் காணப்படின், கொரோன வைரசின் தாக்கமிருக்கிறதா என்பதனைக் கண்டறிய பரிசோதனைக்குட்படுத்தப்படுவார்கள்.
- அவ்வாறிருக்குமாயின், அனுமதிக்கப்பட்டு தேவையான மேலதிக பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைக்கான பொருத்தமான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுவாச கிருமித்தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து பொருத்தமான சுகாதார செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். அவையாவன:

- அதிக சனநடமாட்டமுள்ள இடங்களைத் தவிர்க்கவும்.
- சுவர்க்காரம் மற்றும் நீரினால் அல்லது அல்கஹோல் கொண்ட கைகழுவிகளினால் அடிக்கடி கைகளைக் கழுவவும்.
- இருமும் போதும், தும்மும் போதும் முழங்கைகளை மடித்து அல்லது திசு போன்றவற்றினால் வாயையம் மூக்கையும் மறைத்துக்கொள்ளவும். பயன்படுத்திய திசுக்களை உரிய முறையில் அகற்றுவதுடன், உடனடியாக கைகளைக்

கழுவிக்கொள்ளவும்.

- காய்ச்சல் மற்றும் இருமல் இருக்கும் எவருடனும் நெருக்கமான தொடர்பைத் தவிர்க்கவும்.
- கொரோனா வைரசின் தாக்கத்திற்குள்ளான நகரிலிருந்து பயணித்திருந்து காய்ச்சலும் இருமலும் இருந்தால், உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறுவதுடன், உமது பயணம் தொடர்பான தகவலை மருத்துவ சேவை வழங்குனர்களிடம் தெரியப்படுத்தவும்.



Dr. Sudath Samaraweera

Chief Epidemiologist

Epidemiology Unit

Ministry of Health and Indigenous Medical Services.

25 January 2020

- Avoid close contact with anyone who is having fever and cough.
- If you have fever and cough, and had travelled to a city from where novel coronavirus cases are reported, seek prompt medical advice and share your travel history with the health care provider.

Dr. Sudath Samaraweera Chief
Epidemiologist Epidemiology
Unit
Ministry of Health and Indigenous Medical Services. 25
January 2020